**செய்தி வெளியீடு எண்: 387** **நாள்: 01.07.2019**

**செய்தி வெளியீடு**

## இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககம்
## யோகா மற்றும் இயற்கை மருத்துவம்.

**2019-20** ஆம் கல்வியாண்டில், தமிழகத்திலுள்ள அரசு மற்றும் சுயநிதி யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிகளில் வழங்கப்படும் **5 ½ ஆண்டு பி.என்.ஒய்.எஸ் [ B.N.Y.S. ] மருத்துவ பட்டப் படிப்பிற்கான** மாணவர் சேர்க்கை, **மேனிலைப் பள்ளி தேர்வில் அறிவியல் [ இயற்பியல், வேதியியல் (ம) உயிரியல் அல்லது தாவரவியல் (ம) விலங்கியல் ] பாடங்களில் எடுத்த கூட்டு மதிப்பெண் அடிப்படையிலேயே நடைபெறும். ஒரு அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரியும்** (கலந்தாய்விற்கு உள்ள இருக்கைகள் 60 ), **ஏழு சுயநிதி சிறுபான்மையினர் அற்ற யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிகளும்** [ அரசு ஒதுக்கீட்டிற்கு ஒப்பளிக்கப்பட்ட இருக்கைகள் 358 (65%) மற்றும் நிர்வாகத்தினர் ஒதுக்கீட்டிற்குள்ள இருக்கைகள் 192 (35%)] உள்ளன. (இங்கு கொடுக்கப்பட்டுள்ள இருக்கைகளின் விவரம் தற்காலிகமானது, சென்னை-32, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழத்தின் 2019-'20–ம் கல்வியாண்டிற்கான அனுமதிக்கப்பட்ட இருக்கைகள் தொடர்பான ஆணைகளுக்கு ஏற்ப மாறக்கூடியது.)

விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் தொகுப்பேட்டினை கீழ்க்காணும் அரசு இந்திய முறை மருத்துவக் கல்லூரி முதல்வர்களிடமிருந்து **01.07.2019 முதல் 19.07.2019 உள்ளிட்ட காலத்தில்** அனைத்து அலுவலக வேலை நாட்களிலும் **காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை "இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி, சென்னை-106"** என்ற பெயரில் எடுக்கப்பட்ட **ரூ.500/-** க்கான சென்னையில் மாற்றத்தக்க, **கேட்பு வரைவோலையை** செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். **பட்டியல் இனம் / பட்டியல் இனம் (அருந்ததியினர்) / பழங்குடி இனத்தை** சார்ந்த மாணவர்களுக்கு மேற்படி விண்ணப்பப் படிவத்திற்கான தொகை செலுத்துவதிலிருந்து **விலக்கு அளிக்கப்படுகின்றது**. மேலும் இவ்விண்ணப்பதாரர்கள் தங்களது சுயசான்றொப்பமிட்ட சாதி சான்றிதழின் நகல் மற்றும் +2 மதிப்பெண் சான்றிதழின் நகல்களை சமர்பித்து விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல் தொகுப்பேட்டினை பெற்றுக் கொள்ளலாம்.

1. **அரசு யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி, சென்னை – 106.**
2. **அரசு சித்த மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம்.**
3. **அரசு ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி, கோட்டார், நாகர்கோயில், கன்னியாகுமரி மாவட்டம்.**
4. **அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரி, திருமங்கலம், மதுரை மாவட்டம்.**

மேலும் இத்துறையின் வலைதளமான **"www.tnhealth.org"** –லிருந்து தகவல் தொகுப்பேடு மற்றும் விண்ணப்பத்தினை மேற்குறிப்பிட்ட விண்ணப்ப விநியோக காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**அனைத்து தேவையான இணைப்புகளுடன் பூர்த்தி செய்த விண்ணப்பத்தினை கீழ்க்காணும் அலுவலகத்தில் சமர்பிக்க (நேரிலோ அல்லது எவ்வகை தபால் சேவை மூலமாகவோ வந்து சேர வேண்டிய) கடைசி நாள் 22.07.2019 மாலை 5.30 மணி வரை ஆகும்.**

**தேர்வுக் குழு,**
**இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை,**
**அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகம்,**
**அரும்பாக்கம், சென்னை-106.**

இம்மாணவர் சேர்க்கை செயல்முறைகள் முடிவு பெறும் நாளதுவரையில் பொது தரவரிசை பட்டியல், அழைப்பு கடிதம், கலந்தாய்வு அட்டவணை மற்றும் இதர கலந்தாய்வு தொடர்பான அனைத்து செய்திகளும் / தகவல்களும் இத்துறையின் வலைதளமான **"www.tnhealth.org"** –ல் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட இருப்பதால், விண்ணப்பதாரர்கள் இத்துறையின் வலைதளத்தை விண்ணப்பப் படிவம் விநியோகம் செய்யப்பட்ட நாளிலிருந்து கண்டிப்பாக தவறாமல் தினந்தோறும் குறைந்தது இருமுறை பார்வையிட அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**